# பழனி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் – திரு.மு.முகமது ஜாகிர் உசேன் எம்.எஸ்.சி., எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்

ந.க.எண் : 1585/அ1/2014. நாள். 12.09.2016

*********

பொருள் : கருணை அடிப்படை பணி நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.லேட்.வி.சக்திவேல் என்பாரின் வாரிசுதாரர் திரு.எஸ்.செந்தில்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமன ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை : 1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள். ந.க.எண்.26205/ஜே4/2015. நாள்.20.07.2016.

2. வேடசந்தூர், அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

*********

பார்வையில் காணும் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்கவும் மற்றும் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பணிக்காலத்தில் இறந்த அரசு ஊழியர் திரு.லேட்.வி.சக்திவேல் என்பாரின் வாரிசுதாரர் திரு.எஸ்.செந்தில்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் / முகவரி | நியமனம் அளிக்கப்படும் பதவி மற்றும் அலுவலகம் |
|---|---|---|
| 01. | திரு.எஸ்.செந்தில்குமார்<br>த.பெ.லேட்.வி.சக்திவேல்<br>மறவபட்டி, எரியோடு அஞ்சல்,<br>வேடசந்தூர் தாலுகா,<br>திண்டுக்கல் மாவட்டம். | இளநிலை உதவியாளர்<br>அரசு உயர்நிலைப்பள்ளி, வில்பட்டி<br>கொடைக்கானல் தாலுகா<br>திண்டுக்கல் மாவட்டம் |

மேற்கண்ட நியமனம் முற்றிலும் தற்காலிகமானதாகும். நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன ஆணை கிடைக்கப் பெற்ற ஒரு வாரத்திற்குள் பணியில் சேர வேண்டும். உரிய காலத்திற்குள் பணியில் சேரத் தவறினாலோ அல்லது விண்ணப்பதாரரால் தரப்பட்டுள்ள விபரங்கள் தவறு என அறிய வந்தாலோ இந்நியமனம் இரத்து செய்யப்பட்டதாய் கருதப்படும்.

பணியில் சேரும் நாளன்று உதவி மருத்துவ அலுவலரிடமிருந்து உடல் நலத்தகுதிச்சான்று பெற்று பணியில் சேர வேண்டும். பணியில் சேர்ந்த உடன் அதற்கான அறிக்கையினை உடனடியாக அன்றே இவ்வலுவலகத்திற்கு அனுப்ப கோரப்படுகிறது

பணியில் சேர்ந்த நாள் முதல் ஊதிய விகிதம் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2400 அதற்கு தகுதியுடைய இதர படிகளும் விதிகளின்படி பெற தகுதியுடையவர் ஆகிறார். இவரது கல்விச்சான்றுகளின் உண்மைத்தன்மை குறித்த சான்று உடனடியாக பெறப்பட வேண்டும். இந்நியமனம் RMSA திட்டத்தின் கீழ் பள்ளிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடம் ஆகும்.

தலைமையாசிரியர்

அரசு உயர்நிலைப் பள்ளி.

## நிபந்தனை

1. பள்ளி இறுதித்தேர்வில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாதவராகவோ இருப்பின் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
2. தனியரின் எஸ்.எஸ்.எல்.சி சான்றின் உண்மைத்தன்மையை அறிய எடுக்கப்படும் நடவடிக்கையில் தனியர் முன்னிலைப்படுத்திய கல்விச்சான்று உண்மையானது அல்ல என்றோ விதிகளின்படி மதிப்பீடு செய்ய இயலாது என்றோ கண்டறியப்பட்டால், தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நீக்கறவு செய்யப்படும்.
3. தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
4. அரசுக்கடிதம் எண்.2941/க்யு/94–1 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்.01.03.1994ன்படி ஓராண்டு காலத்திற்குள் பணிவரன்முறை கருத்துரு தவறாமல் இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

தலைமையாசிரியர்
அரசு உயர்நிலைப் பள்ளி,
வில்பட்டி - 624 101.

மாவட்டக் கல்வி அலுவலர்
பழனி
12/9/16

பெறுநர்

திரு.எஸ்.செந்தில்குமார்
த.பெ.லேட்.வி.சக்திவேல்
மறவபட்டி, எரியோடு அஞ்சல்,
வேடசந்தூர் தாலுகா, 624710
திண்டுக்கல் மாவட்டம். (பதிவஞ்சலில்)

நகல்

1. பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை
2. முதன்மைக்கல்வி அலுவலர், திண்டுக்கல்
3. தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, வில்பட்டி. கொடைக்கானல்
4. சார்நிலைக் கருவூலம், கொடைக்கானல்.

(1–3) தகவலின்பொருட்டு பணிந்தனுப்பலாகிறது.